பதிவு எண்—M 5720 | உ வெள்ளிக் கிழமையில் | குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

1224
1-55

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—7 | குருகுலம், மாம்பாக்கம்; செய. தை, உ | 4—[illegible]55 | தளிர்-18

...CE OF THE ... MADRAS
4 MAR 1955

குருகுலத்தார் வழிபாடும் தொண்டும்

சென்ற 29-1-55 சனிக் கிழமையன்று சென்னை, பெத்து நாயகன் பேட்டையிலுள்ள காசி விசுவநாதர் ஆலயத்தில் வழிபாடும் தொண்டும் இயற்றினர். குருகுலத்தாரும் பொதுமக்களும் திரளாகக் கலந்து கொண்டனர். தேவார பாராயணத்துடன் ஊர் வலமும் வழிபாடும் பேரவையும் நிகழ்ந்தன.

பேரவையில் திரு மயிலை சிவ முத்து அவர்களும் திரு இராம தாஸ் M C. அவர்களும் கலந்து கொண்டு நல்லுரை வழங்கினர்.

ஆசிரியர் இளவழகனார் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது: நாம் "உலகத்தில் வாழ்வதற்கு என்னென்னவோ தேவை யென்று நினைக்கிறோம். சிலர் தேவை யென்று நினைப்பனவற்றை வேறு சிலர் இவை அவசியமில்லை யென்று சொல்கின்றனர். ஆகவே எவைதாம் உண்மையாகத் தேவையோ அவை தெரிந்தால் அவைகளைப் பெற்றுக் கொண்டு வாழலாம். திருக்குறளில் வாழ்வுக்கு என்னென்ன உண்மையில் தேவையோ அவைகள் கூறப்பட்டிருக்கின்றன. அதில் கூறப்படாதன வெல்லாம் நமக்குத் தேவையில்லை யென்று கருதலாம்.

தேவைகளில் சிறந்த தேவையாகத் திருவள்ளுவர் ஒன்று சொல்கிறார். அது நூல் முழுதும் வற்புறுத்தப்பட் டிருக்கிறது திருக்குறளைப் பிழிந்து உயர்ந்த ஒன்றை எடுத்துக் கூற வேண்டுமானால் அதனைச் சொல்லலாம். அதுதான் பெரியாரைத் துணையாகக் கொண்டு வாழ்தல். பெரியோர் துணை வேண்டுமென்று தெரிந்து கொண்டால் மட்டும் போதாது; யார் உண்மையான பெரியார் என்றும் அவர் கருத்துப்படி பார்த்துத் தேர்ந்து துணை கொள்ள வேண்டும். திருவள்ளுவர் அழுக்குகளை நீத்த பெரியாரையே உண்மையில் பெரியார் என்று கூறுகிறார். அவர்களை நீத்தார் என்று குறிப்பிடுகிறார்.

மக்களுக்கு இவர்கள் துணை வேண்டும் என்று கூறியவர், மக்களை ஆள்கின்ற ஆட்சியினர்க்கும் வேண்டும் என்று தெரிவிக்கிறார். பண்டைக்கால அரசர்கள் பெரியார் துணை கொண்டு ஆட்சி நடத்தினர். நாட்டில் யாருக்குப் பெருமதிப்பு எனின் இத்தகைய நீத்தாராகிய பெரியோர்க்கே. அரசனுக்குக் கொடுக்கும் மதிப்பைவிடப் பெரியோர்க்கு அதிக மதிப்புக் கொடுத்து வந்தனர். இக்காலத்தில் அரசினர், திருவள்ளுவர் கூறும் இக் கருத்தைக் கவனித்து நடக்க வேண்டும்.

பெரியோரைத் துணைக்கொள்ளல் பொதுவும் சிறப்பும் என இரண்டு வகைப்படும். பொதுவகையில் அளவளாவி ஏதேனும் ஐயம் கேட்டுக் கொண்டு உறவாயிருத்தல் பொது வகை இணக்கம். சிறப்பு வகை யென்பது குரு என்னும் பெரியார் ஒருவரிடத்தில் முற்றிலும் ஈடுபட்டிருத்தல். பெரியோர்களில் மிகச் சிறந்தவர் யாவர் என்றும் எவரிடத்தில் உள்ளம் தானே ஈடுபடுகிறது என்றும் நன்றாய்த் தேர்ந்து அவரைக் குருவாகக் கொள்ளலாம்.

குருவாய் ஒருவரைத் தான் கொள்ளலாம். தேர்ந்து குருவாகக் கொண்டபின்னர் அவர் சொல்படி நடக்க வேண்டும். நம்மை முழுமையும் அவருக்கே ஒப்படைத்துவிட வேண்டும். பின்னரும் அவர் கூறு

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

6/1/56

கலைப் பகுதி:

மரவினமும் பிறவும்:

செடி கொடி மரங்கள் ஓர் அறிவு உயிர்கள்; ஓர் அறிவு என்பது தொட்டால் தெரிந்து கொள்ளும் அறிவு; அதற்கும் மனம் வேண்டும்; ஆனால் அந்த மனம், ஆற்றலில் மெல்லியதாய் இருத்தல் வேண்டும்.

ஓர் அறிவு என்னும் தொட்டறிவு உடம்பறிவு எனப்படும். ஓரறிவு மட்டும் இருப்பதனால், மற்ற உயிர்களுக்கு இருக்கும் தொட்டுணர்ச்சியை விட மரஞ் செடி கொடிகளுக்கு அவ்வுணர்ச்சி மிகுதியாயிருக்கும்; மென்மைக்கு மிக மென்மையாயும் வன்மைக்கு மிக வன்மையாயும் இருக்கும் பகுதிகள் அவற்றில் உண்டு; மேலும், தொட்டறிவு என்பது உடம்பறிவாதலின், மற்ற உயிர்களுக்கு இருக்கும் உடம்புகளைவிட மரஞ் செடி கொடிகளுக்கு மிக உயரமும் மிகப் பருமனும் மிக நீளமும் மிக நுட்பமுமான உடம்புகள் காண்கின்றோம்.

உயிர்களின் வரிசையில் மரஞ் செடி கொடிகளும் ஒரு பிரிவு; மற்ற மற்ற உயிர்களும் வேறு வேறு பிரிவுகளில் அமையும், என்றாலும், மரஞ் செடி கொடிகளை மட்டும் 'நிலைத் திணை' (தாவரம்) என ஒரு பிரிவாகவும், மற்ற ஈரறிமுதல் ஆறறிவு வரையில் உள்ள எல்லா உயிர்களையும் 'இயங்குதிணை' (சங்கமம்) என வேறு ஒரே பிரிவாகவும் பிரித்து இரண்டே நோக்கால் நோக்குதலுண்டு. மணிவாசகப் பெருமான், 'புல்லாகிப் பூடாய்' என்று தொடங்கி, 'முனிவராய்த் தேவராய்' என்பவர் வரையிற் சென்று, "இத் தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம் பெருமான்" என்று இரண்டே பிரிவில் வகைப்படுத்திக் கூறுதலை இங்கு நினைவுகூரலாம்.

செய்திப் பகுதி:

குருகுலத்தார்

கார்த்திகைச் சுற்றுப் பயணம்:

கொங்கு சேர நாட்டுத் திருப் பயணமாக, இது, அமைகிறது. பெரியோர் பாடல் பெற்ற இறை திருமுன்னிலைகளையே தொண்டுக் களங்களாகக் கொண்டு மக்கட்கு ஆக்கப் பணி செய்தலை இக் குருகுலம் மேற்கொண்டிருக்கின்றது. இம் முறைப்படி, நாட்டில் உள்ள எல்லாப் பாடல் பெற்ற திருக் கோயில்களும் இக் குருகுலத் தொண்டுகட்குக் கிளை அருளிடங்களாய் உதவலாம்.

முன்பெல்லாம், கல்வி, தொழில், மருத்துவம், கண்காட்சி, பட்டி மன்றம் போன்ற செய்கைகளுக்குத் திருக்கோயிலின் சுற்றிடங்கள் உதவியாய் இருந்ததுண்டு. திருவருள் ஈடுபாட்டுடன் இவை பலவும் செய்யும் வழக்கம் அமைந்திருந்தது.

பெரியோர் பாடல் பெற்ற இடங்கள் மிக்க ஆற்றல் வாய்ந்த திருமுன்னிலைகள்! மின் இயக்கம் மிக்க ஆற்றலுடையதேயாயினும், பயன் கொள்ளும் கருத்தில்லாதவர்க்கு அதனால் நலம் ஏது? தலங்களைப் பயன்கொள்ளும் ஊக்கமிருந்தால், அவை மற்ற இடங்களைவிட ஆற்றலாய் உதவும்; அப்படிப் பயன் செய்யும் கருத்திருக்கின்றது.

இதற்கு, நாட்டின் ஒத்துழைப்பும் அரசின் இணக்க உதவியும் சான்றோர் பெருமக்கள் துணையும் இருப்பது நல்லது.

மாம்பாக்கம் குருகுலத்தார் அவ்வப்போதும் நாடுகள்தோறும் இதற்காகச் சுற்றுப்பயணம் செய்துவருகின்றனர். அங்கங்கும் முதல்வன் திருமுன்னிலைகளில் வழிபாடுகளுடன் மக்களுக்காக இயன்ற தொண்டுகளும் ஆற்றி வருகின்றனர்.

26-11-55 முதல் 9-12-55 வரையில் இரு வார காலம் கொங்கு, சேர கன்னட சோழ நாடுகளில் குருகுலத்தார் சுற்றுப் பயணம் மேற்கொள்வர்; இதன் பொருட்டு சென்னை அரசின் அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தார் அங்கங்கும் உள்ள திருக்கோயில் அறங்காவலர்க்கும் ஆட்சியினர்க்கும் ஆதரவுமிக்க சுற்றறிக்கைகள் விடுத்து, குருகுலத்தார் பயணத்தை நன்கு பயன்பட உதவியிருக்கிறார்கள். குருகுலத் தொண்டுகட்கு ஈது ஆக்கமும் ஊக்கமும் தருவதாகும். அறங்காவலரும் ஆட்சியாளரும் அங்கங்கும் நகரப் பெருமக்கள் தொடர்புடன் மேலும் மேலும் குருகுலத்தாரை தக்க உதவிகள் ஒத்துழைப்புகளுடன் ஊக்குவித்து நாட்டுத் தொண்டுகள் நன்கு நடக்க உதவுதலும் கூடும். முன் திருப்பயணங்களில் எல்லாம் அப்படித் தக்க ஒத்துழைப்புகள் கிடைத்திருக்கின்றன.

நாட்டவர் திரண்டு, குருகுலத்தின் இந் நல்லியக்கத்திற் கலந்து கொள்வார்களாக!

இத் திருப்பயணத்திற் கலந்து கொள்ளும் குருகுலத்தார்க்குக் குறிப்பு:-

1. 1500-கல் செல்லத் தகுந்த மலிவான 'ரெயில்டிக்கட்டு' இதற்கு ரூ 32-5-0ல் கிடைக்கும்; மூன்று மாதங்கள் வரையில் செல்லும்.
2. சேர்க்கைக் கட்டணம் பொதுக் கட்டணம் ரூ 8 செலுத்திய பின்பே, இத் திருப்பயணத்திற் கலந்துகொள்ளலாம்.
3. குளிர் நேரங்களில் பயனாகும்படி, ஏற்ற உடைகளோடும் அளவான படுக்கைகளோடும் வருதல் நல்லது.
4. நிகழ்ச்சிக் குறிப்பின்படி அங்கங்கும் நேரம் ஒழுங்குபடுத்திக் கொள்ளுதல் முதன்மை.

Phone 55934 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட் மார்க்.



பட்டாடைகளுக்கும்

நூலாடைகளுக்கும்

சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்,
53, கிடங்குத் தெரு. சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)

தொழிற் பகுதி:

உழவும் தொழிலும்:

தோள் வன்மையால் நடைபெறும் செயல்களைத் 'தொழில்' என்று வழங்கிவருகின்றனர். திருவள்ளுவரும், 'கைசெய்து ஊண் மாலையவர்' என்று தொழில் செய்வாரைக் குறிப்பிட்டார். 'கையால் உழைத்து உண்ணும் இயல்புடையவர்' என்பது அதன் பொருள். 'தன் கையே தனக்கு உதவி' என்னும் பழமொழியும் இங்கே நினைவு கூரலாம்; 'கைவேலை' என்று சொல்வதையும் கேள்விப்பட்டிருக்கிறோம்

இங்ஙனம் கையுழைப்பாய்ச் செய்யும் தொழில்களில், தலைமைச் சிறப்பமைந்தது உழவு தொழில்; தொழில்களின் அரசு இது! அப்படியிருப்பதனால், தொழில்கள் பலவற்றுள் இதனையும் அத்தனை எளிதாக எண்ணிவிடாமல் தனியாகப் பிரித்து 'உழவு' என்றும், இது தவிர மற்றத் தொழில்களையெல்லாம் 'தொழில்' என்றும் பொதுவாக எல்லாரும் வழங்கிக் கொண்டனர். அண்மையில் விளங்கிய பாரதியாரும்,

> "உழவுக்கும் தொழிலுக்கும்
> வந்தனை செய்வோம்"

என்று இப் பிரிப்பினைக் கையாண்டிருக்கிறார்.

இப் பிரிப்பில் தொழில் என்பது, உழவினால் உண்டாகும் உணவு நலந் தவிர், வாழ்க்கைக்கு இன்னுந் தேவையான உடை நிழல் முதலியவற்றிற்கும், உழவு கருவிகளுக்கும், உரிய துணைத் தொழில்களைக் குறிக்கும். ஆகவே, உழவும் ஏனைத் தொழில்களும் எல்லாம் தொழிற் பகுதியில் அடங்கும்.

ஆலைத் தொழில் போன்றவை, 'தொழில்' என்பதற்கு இப்போது சிறப்பாய்க் கருதப் படுகின்றன; உலகம் விஞ்ஞானச் சிறப்பில் ஓங்கி வருதலின், எல்லாவற்றிற்கும் கருவிக் கண்டுபிடிப்புகள் தோற்றுகின்றன; கருவிகளைச் செய்யும் இடங்கள் 'தொழிற் சாலைகள்' என்றும், செய்வோர் 'தொழிலாளர்கள்' என்றும் பெயர் வழங்குகின்றது. செய்த கருவிகளைக் கொண்டு, வேறு கருவிகள் செய்வதும் வாழ்க்கைப் பொருள்கள் தோற்றுவிப்பதுங்கூடத் தொழில்கள் ஆகின்றன.

ஆயினும், கைத் தொழில்களே ஆலைத் தொழில்களைவிடத் 'தொழில்' என்னும் சொல்லின் பொருளுக்கு ஏற்றதாய் உள்ளது.

அருட் பகுதி:

திருவருள் வழி:

அறிவு விளக்கம் உடையோர் எதனையும் ஆராய்தல் இயல்பு; உலகமும் அப்படி அவர்கட்கு ஓர் ஆராயும் பொருள்!

உலகம் என்பது, அறிவில்லாத பொருள்களும் அறிவு உள்ள உயிர்களும் உள்ளதாய் இருக்கிறது. உயிர்களின் அறிவு, சிற்றறிவாயிருப்பதனால், உலக நிகழ்ச்சிகளை அவை, தாமே செய்துகொள்ளக் கூடியனவாய் இல்லை. ஆதலால், உலகத்தின் இயக்கத்திற்கு வேறு ஏதோ ஒரு பெரு வல்லமை காரணமாய் இருக்க வேண்டும் என்று தோற்றுகின்றது. அந்தப் பெருவல்லமைப் பொருளின் நிலைமைகள், நம் அறிவுக்கு அப்பாற்பட்டதாய் இருப்பதனால், அதனைக் 'கடவுள்' என்று சொல்லிவருவது பொருத்தமாகவே உள்ளது.

இதனால், பொருள்கள் உயிர்கள் கடவுள் என்னும் முப் பொருள்களின் உண்மை தெளியப்படுகின்றது.

பொருள்களின் தன்மை அறியாமை; உயிர்களின் தன்மை அறிவும் அதன் கனிவாகிய அன்பும்; கடவுளின் தன்மை அருள்! 'அன்பெனும் உயிர்' என்றும், 'அருட் பெருஞ் சோதி' என்றும் வள்ளலார் வழங்கிய வாக்குகளில் உயிரின் இயல்பு அன்பு என்பதும், கடவுளின் இயல்பு 'அருள்' என்பதும் விளங்கும்.

இறைவன் அருள், உயிரின் அன்பில் பதிந்தால், உயிரிரக்கம் என்னும் 'சீவகாருண்யம்' பெருகும்; நாடு அந் நிலையில் ஐம் பெருந் தீவினைகளால் அலையுறாது அமைதியும் நலமும் அடையும். திருவருள் வாழ்வே பெருவாழ்வு! உயிர்கள் உய்ய வேறு வழி ஏது?

உயிரக்கம் ஒருவருக்குப் பெருகி வர, திருவருட் பதிவு அவரிடம் மிகுந்து வருகின்றது என்று துணியலாம்; வேறு திறமைகள் பெருகுவதனால் இப்படித் துணிய முடியாது. அதனாலேதான் எல்லாச் சமயங்களும் உயிர்கள் ஒன்றின்மேல் ஒன்று நெஞ்சக் கனிதலுடன் வாழ்தலைக் கற்பிக்கின்றன; இயற்கையும் அதுதானே தெரிவிக்கின்றது!

கைத் தொழில்கள் அளவான பொருள்களை உண்டாக்கும்; ஆலைத் தொழில்கள் பிற நாடுகளைச் சந்தையாக்கிக் கெடுக்காமல் இருந்தால், அந்த அளவுக்கு அமைத்துக் கொள்வது தகுதி.

பணிப் பகுதி:

மெய்ப் பணி:

ஈர நெஞ்சமும் கடமையுணர்ச்சியும் அருள் ஒருமையும் உடைய தலைமக்கள், ஏதாவது அரிய தொண்டுகள் செய்து கொண்டுதான் இருப்பர்; தொண்டுகள் செய்யாத நாள் அவர்களுக்கு வீண் நாளாய்த் தோன்றும்.

தொண்டுகள் என்பவை பிறர் பொருட்டுச் செய்யும் (தியாகச்) செயல்கள்! அந்நிலையில் தந் நலம் என்பது இல்லை. தந் நலம் முற்றும் அற்ற நிலை, 'அருள் நிலை' எனப்படும்; தந் நலம் ஒரு சிறிதேனும் இருக்கும் நிலை 'அன்பு நிலை' எனப்படும்; தந்நலம் எவ்வளவுக்கெவ்வளவு குறைகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அது கனிந்த அன்பு நிலையாகும்; அன்பு நிலையிற் செய்வன, பிறர்க்கென்று தோற்றினாலும், தமக்காகவும் செய்வவாகத்தான் தெளிய வேண்டும். புகழ் நோக்கமாகவோ, பிற் பயன் எதிர்நோக்கியோ, இடையூறுகள் தீரவோ, பிற காரணங்களுக்காகவோ செய்வனவாதல் வேண்டும். 'தொண்டு' என்பது இவற்றிற்கெல்லாம் முற்றிலும் வேறுபட்டது. தமக்கென்பது அதனில் ஒரு சிறிதுமில்லை. 'பணி' என்பது இது!

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் நிலைதான் அருள் நிலையிற் பிறந்த தூய தொண்டு நிலை! ஆயினும், தம்மைக் காத்துக் கொள்ளுங் கடமையும் ஒன்று ஒவ்வொருவர்க்கும் இல்லையா என்று இங்கே ஐயுறலாம்; தம்மைக் காத்துக் கொள்வதும் பிறர்க்குப் பணி செய்யும் பொருட்டே என்று அப் பணி நோக்கத்துக்கே முதன்மை தருவதாயிருந்தால், அந்நிலையும் அருள் நிலையேயாம்; எல்லாவகையிலும் பெரும்பகுதி அப்போது பணிவகைக்கே செலவாகும்.

இப்பொறுமை, பொறுத்தலோடு தாங்குதலாகிய பெருஞ் சிறப்பின்வரை செலுத்தலின், நல்லான அறம் என்றற்குத் 'தலை' என்றார். 'அகழ்தல்' என்னும் உவமை, இகழ்தலின் பேரெல்லையை உணர்த்திற்று.

இல்வாழ்க்கையின் இயல்

விளக்கம்:

'இல்வாழ்க்கை' என்பது, மக்கள் மெல்ல மெல்லத் தன்னலங் கழன்று பண்பட்டு வர உதவுகின்றது; முற்றுந் தன்னலமற்ற நிலையில் துறவறம் நிகழ்கின்றது. மொத்தத்தில், வாழ்க்கை என்பதே, பிறர் பொருட்டு நிகழ்தலேதான்.

இந்நிலையில், இல்வாழ்வோர் பற்பல கடமைகளைப் பிறர்பொருட்டு மேற்கொள்வர். தமக்காக வாழ்தல் என்னும் உணர்ச்சி, மெதுவாகத் தம் குடும்பத்தவர்க்காக என்றும், தம் சுற்றத்தவர்க்காக என்றும், தம் ஊரவர் நாட்டவர்க்காக என்றும், தம்மை நோக்கி வரும் விருந்தினர்க்காக என்றும் அயலவரை நோக்கிச் செல்கின்றது; அதன் மேலும், பிறரோடு ஒத்து வாழும் நிலையில் பிறர்க்கு உதவியாயிருத்தலை 'ஒப்புரவறித'லாகவும், பொதுவான வாழ்க்கைத் தேவைகளிலும் வறியராயிருக்கும் ஏழை எளியவர்க்கு உதவியாயிருத்தலை 'ஈகை' யாகவுங் கொண்டு, அன்பு மிகக் கனிந்து அருள் நிலையை எட்ட உயர்கின்றது. தமக்கென வாழும் உணர்ச்சி, வர வரப் பிறர்க்கென வாழும் உணர்ச்சியாய்ப் பெருகி வரற்குரிய பண்பை, இல்வாழ்க்கை இங்ஙனம் வளர்த்து வருகின்றது.

ஆகவே, இல்வாழ்க்கை என்பதுகூடத் தமக்காக வாழ்வது என்றே தீர்மானித்துவிடுதற்கில்லை; பிறர்க்கென வாழும் பயிற்சி நிலையே அது! அதனுலே தான், 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலப்' பொறுமை மேவுதல் இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டது. அப்படிக் கூறுமிடத்தும், மிகவும் கட்டாயப் படுத்தாமல் 'மறத்தல் அதனினும் நன்று' என்று இனிய முறையில் கூறுகின்ருர் ஆசிரியர்! துறவறமாயின், 'அவர் நாண நன்னயம் செய்துவிடல்' என்று கட்டளையாகவே கூறுவர். ஆகவே இல்வாழ்க்கைக் காலம் என்பது, தன்னலமின்றி வாழப் பழகிக்கொள்ளும் பயிற்சிக் காலம் என்றே துணியப்படும். இல்வாழ்வோர் அதனிற் பயின்று தேர்தல் வேண்டும்.

'பொறையுடைமை' முதலிய அதிகாரங்கள் இப் பயிற்சியில் மேல் நிலை அதிகாரங்கள்! பிறர்க்காகப் பொறுத்து வாழ்தல் இல்வாழ்க்கையில் நன்கு அமையும்; நன்கு கவனிக்கவும் படும்; பொறுத்து வாழ்வதற்கான பற்பல குறுக்கீடுகளும் காலமும் வாய்ப்புகளும் நேரும்; அவற்றிலெல்லாம் நன்கு பயின்று பண்படவேண்டும்.

நிலத்தைக் குடைந்து அகழ்தலைப் போல், சிலர் எந்நேரமும் துன்புறுத்தியபடியே யிருப்பர்; இல்வாழ்க்கைக்கு மதிப்புப் பெரிது! அம் மதிப்புக் குன்றும்படியும் பிறர் நடந்துகொள்வர்; ஆயினும் பிறர்க்கென வாழ்தலே பேரறம் என்னும் தம் தலையான கொள்கையை மறந்துவிடலாகாது; தாம் பிறரை ஒறுக்கும் பெருநிலையில் உயர்ந்து நிற்குந்

காலத்திலேதான் அதனைப் பின்னும் மறத்தலாகாது; பொறுத்து, உதவி தேவையாயின் உதவி, இரண்டையும் மறந்து, இங்ஙனம் பிறர்க்குதவியான வாழ்க்கைப் பேற்றை அடைந்து விளங்கல் முதன்மை!

**பொறுத்தல் இறப்பினை என்றும், அதனை
மறத்தல் அதனினும் நன்று.**

உரை:

பொறுத்தல் இறப்பினை என்றும் – தம்மிடம் ஒருவன் அளவு கடந்து நடத்தலை எந்நிலையிலும் பொறுத்துக் கொள்க; அதனை மறத்தல் அதனினும் நன்று – அந் நிகழ்ச்சியை மறந்துவிடுதல் அப் பொறுத்தலினும் நல்லது.

குறிப்பு:

பொறுத்தல், பொறுக்க என்னும் பொருட்டு; வியங்கோள். மறத்தல் என்பதும் மறக்க என்றபடி.

இறப்பு என்றது கடத்தலை; அதாவது அளவு கடந்து நடத்தலை.

என்றும் – எப்போதும்; எந்நிலையிலும்; இகழ்வாரை ஒறுக்கும் நிலையில் தாம் இருக்குங்காலத்தும் என்றற்கு.

பொறுப்பது மட்டுமே பெரிதன்று, அதனை மறத்தலும் வேண்டும் என்றற்கு 'மறத்தல்' என்றும், இகழ்வதை அப்போது பொறுத்தாலும் உள்ளத்தில் அந்நினைவு இருத்தலின் மற்றொரு காலத்தில் அது வெளிப்பட்டு ஒறுக்க நேர்ந்தாலும் நேருமாதலின், 'மறத்தல் அதனினும் நன்று' என்றும் கூறினார். 'நன்றல்லது அன்றே மறத்தல் நன்று' என்றார் முன்னும்.

இங்கே கூறிய பொறுமை, ஈது இல்லறவியலாதலின், தம்மவர், தகுதி கடந்து நடந்துகொள்ளுகின்றபோது மேற்கொள்ளவேண்டிய கடமை கூறியபடி;

உரை:

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல – தன்னைக் குத்திப் பள்ளம் தோண்டுவாரை விழாமல் தாங்கும் நிலத்தைப்போல; தம்மை இகழ்வார்ப் பொறுத்தல் – அறிந்தும் அறியாமலும் தம்மை இகழ்கின்றவரைத் தாங்கி நிற்றல்; தலை – சிறந்த அறம்.

குறிப்பு:

நிலம்போலப் பொறுத்தல் வேண்டும் என்பது கருத்து. 'அகழ்வாரைத் தாங்கும் நிலம்' என்றதனால், அகழாரை அது தாங்குதலும் அகழ்வாரையும் அகழாதாரையும் ஒப்பத் தாங்குதலும் உணரப்படும். அறிவில்லாத நிலத்தை, ஆனால் உறுதியுள்ள நிலத்தை உவமை கூறியதனால், தம்மை இகழ்வாரிடத்து ஏதும் தெரியாதவரைப்போல இருந்துகொள்ள வேண்டும் என்பதும், பொறுத்தலில் உறுதி யுள்ளம் உடையவராய் இருக்கவேண்டும் என்பதும் பெறப்படும். தாங்கும் என்ற குறிப்பால் பொறுத்தல் என்பது, தம்மை இகழ்தலைப் பாராட்டாது விடுதலோடு, அல்லது அதனை உட்கொள்ளாமல் மறத்தலோடு, திரும்ப உதவவும் வேண்டும் என்னும் அரிய தொரு குறிப்பும் இனிது தெளியப்படும்.

இகழ்தலாவது மனத்தால் பொருள் செய்யாமையும், சொல்லால் செயலால் அதனைப் புலப்படுத்தலுமாம்.

'தம்மை' என்று பன்மையாற் கூறினமையால், 'இல்வாழ்வான்' 'வாழ்க்கைத் துணைவி' என்னும் இருவரையும் அது சுட்டிற்று; தனிப்பட்ட ஒருவரை அது குறிக்கும் நேரத்தில், அவ்வாறு பொறுத்துக் கொள்ளுதல் சான்றோர்க்கல்லது பிறர்க்கு இயலாமையின், அப் பெருமையை நினைந்து, உயர்வின் பொருட்டு வந்த பன்மையாகக் கொள்ளப்படும்.

போதும் என்றே மற்றவர்கள் எண்ணவேண்டும். அதற்கு மாருக இடையூறு விளைவிப்பவர் பிற வகைகளில் எவ்வளவுதான் மேம்பட்டவர்களானலும் நெஞ்சிரக்கம் சிறிதும் இல்லாதவராகவே கருதப் பட்டுத் தாழ்வானவராக மதிக்கப்படுவர்.

மக்கள் இப்படி இன்னலில் உழலுதலால், சான்ருேராய் உயராத நிலையில், அறிந்தும் அறியாமலும் காரிய காரணத் தெளிவு இல்லாமலும், பிறர்க்கு இடையூறு செய்வர்; மனம் வாக்கு காயங்களாலும் இகழ்வர்.

ஆனல் பண்பட்ட நல்லவர்களாய் உயர்ந்திருப் பவர்கள், இயல்பாகவே உயிர்களுக்கு இருக்கும் இடையூறுகளைக் கருதி, தம்மை இகழ்வாரைப் பொறுத்துக்கொள்வர்; ஏதோ முன் செய்த தீவினை இவர் வாயிலாக வந்து தம்மைத் தாக்குகின்றது என்றே கருதுவர். தமக்குப் புதிய வினை நேராமைப் பொருட்டும் இகழ்வார்பால் தமக்குள்ள இரக்கத்தின் காரணமாகவும் தாம் திரும்ப இகழார். இகழாமையோடு, தம்மால் அவர்களுக்குத் துணை வேண்டும்பொழுது உதவியும் புரிவர். பொறுமை என்பது இப் பெரும் பண்புவரையிற் செல்வது சிறப்பு. அதனல், சான்ருேர் கடமைகளில் இது தலை சிறந்த தாயிற்று.

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

பிறர் அவ்வாறு நடக்கின்றபோதும் ஒறுக்காது பொறுக்க என்னும் உண்மை, துறவற நிலையினர்க்குத் துறவற வியலில் 'இன்னு செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயம் செய்துவிடல்' என்பதிற் கூறுவர்.

பெரும்பே ராற்றல்

விளக்கம்:

அன்றுட வாழ்க்கையில் பலர்க்குப் பல ஐயங்கள் தோன்றி, நடந்துகொள்ளும் முறைகளில் சிக்கலுண்டாக்கி வாழ்நாட்களை மேன்மையில் உயர்த்தாமல் நலிவித்து விடுகின்றன. மாந்தர் இச் சிக்கலில் நிலைகுலைந்து போகின்றனர். உலகத்தில் தீமையின் காட்டாறு கரைபுரண்டு அழிவுக்கோலம் காட்டுகின்றது.

பண்பட்ட உள்ளமுடையோர்தாம், இதனை அடக்கும் பண்பாற்றல் உடையவர்; பிறரால் இயல்வதன்று இது! பொதுவாக வெள்ளத்தை அடக்குதற்கே ஆற்றல் வேண்டும்; காட்டாற்றின் கரைபுரண்ட வெள்ளத்தை அடக்கி உலகை அழிவிலிருந்து உய்விக்க வேண்டுமானுல், ஆற்றலிலும் ஆற்றல், அதாவது 'வன்மையுள் வன்மை' வேண்டுமன்றே! பண்புடையோர், தமதுள்ளம் ஒரோவொருகால் குணமென்னுங் குன்றேறி நின்றுர் வெகுளிபோலப் பெருக்கெடுக்கும்போது அந்த நல்லாற்றின் வெள்ளத்தை அடக்கிக் கொள்வதற்கே ஆற்றல் வேண்டும்; என்றுல், தீயோர்தம் உள்ளப் பெருக்காகிய காட்டாற்று வெள்ளத்தைத்தணிவிக்கப்பெரும்பேராற்றலன்றே வேண்டப்

படும்; அத்தகைய வன்மையுள் வன்மையைப் 'பொறையுடைமை' தருகின்றது.

அறிந்தும் அறியாமலும் பிறர் தமக்கு இழிவுகள் செய்யும்போது பொறுத்துப் பொறுத்துத்தான் இப் பெரும் பேராற்றலை யாரும் மிகுத்துக் கொள்ள முடியும்.

அறியாமற் செய்வாரைப் பொறுத்துக் கொள்ளலாம்; அறிந்து செய்வாரை ஓரளவு பொறுக்கலாம்; அந்த அளவு மிகாததற்கு முன்பே, அவர் நாண நன்னயமும் செய்யலாம். பொறுத்தலையன்றி ஒறுத்தல் என்பது மன நலம் படைத்த மாந்தர்க்கு எந் நிலையிலும் இல்லை; அதற்கு அரசினரால் அருளால் தானே நேரும் நிலை வரும். 'ஆகாமியம்' ஏறும் வினையுடைய மாந்தர்க்கு இவ்வகையில் முறைமையும் இல்லை; அது, ஆற்றலும் ஆகாது. இத் தெளிவு பல சிக்கலைத் தீர்க்கும்.

இன்மையுள் இன்மை விருந்தொரால்; வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை.

உரை:

இன்மையுள் இன்மை விருந்து ஓரால் – விருந்தாவாரை ஒதுக்குதல் செல்வச் சேர்க்கை யன்று, வறுமையாம்; மடவார்ப் பொறை வன்மையுள் வன்மை – அதுபோல, அறியாமல் இகழ்வாரைப் பொறுத்துச் செல்லுதல் கோழைமை அன்று, ஆற்றலில் ஆற்றலாம்.

குறிப்பு:

பொருளிருந்தும் விருந்து நீக்குதல் பொருளுடைமைக்கு அழகன்று; உண்மையில், அது பொருளுக்கு

பெண்மை நயவாமை நன்று – பிறன் உரிமையில் நிற்பவளது பெண்தன்மையை ஒருவன் காமுருமை நல்லது.

குறிப்பு:

இவ்வோரறம், அவனை நலத்துறையிற் சேர்க்கும் அருங்கலமாய்த் துணைபுரியும் என்றபடி.

அறன்வரையான் – அறத்தின் எல்லையில் நில்லாதவன்; அல்ல – அறன் அல்லாதன. அறன் செய்யாது பாவமே செய்யினும் என்று இடந் தந்தமையால், பிறனில் நயவாமை பேரறமும் நயத்தல் பெரும் பாவமு மாதல் தெளியப்படும்.

வரைந்துகோடலால் உரிமையாதலின், 'பிறன் வரையாள்' என்றார்.

சிறந்த கடமை

விளக்கம்:

வாழ்க்கை பற்பல இடையூறுகளின் இடையே நடந்துகொண்டு இருக்கின்றது. எல்லார்க்கும் இது பொருந்தும்.

இயல்பாகவே இப்படி இடையூறுகளுடன் உயிர் வாழுங் கட்டாயத்திலுள்ள மக்களுக்கோ சிற்றுயிர்களுக்கோ மரஞ் செடி கொடிகளுக்கோ இடையூறு விளைவிக்காமல் இருப்பது நல்லது. அவையவை, தாம் மேற்கொண்ட பிறவிகளை உரிய காலம் வரை எப்படியாவது நடத்தி மேன்மை அடைந்தால்

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

உள்நாடு	ரூ.	4 0 0
வெளி நாடு	ரூ.	6 0 0
தனித் தாள்	ரூ.	0 1 0
ஆயுள்— கையொப்பம்	ரூ.	100 0 0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.

கிளை 8	மன்மத, கார்த்திகை, 18-11-55 வெள்ளி.	தளிர் 4

இயக்குவோர் யார்?

உண்மையில் நாட்டுக்கு இயக்கம் என்பதே சான்றோர் இயக்கந்தான்; இயக்குதற்குரியோரும் சான்றோர்தாம். சான்றாண்மைப் பண்பை அவர் முதன்மையாய்ப் பரவச் செய்துகொண்டிருப்பர்; இதனால் பல சிக்கல்கள் தீர்ந்துவிடும்.

வாழ்க்கைக்குத் தேவையான, கட்டாயமாய்த் தேவையான கல்வி தொழில் முதலிய ஏனையவற்றையும் அவர் பரவச் செய்துகொண்டிருப்பர்; தீமை விளைப்பவற்றை நீக்கிக்கொண்டிருப்பர்.

ஒரு நாட்டின் நன்மதிப்பு, சான்றோரால் உண்டாவதுதான்: மனிதனாய்ப் பிறந்தால் அவன் அடைய வேண்டிய உயர்வு சான்றோன் ஆதலே என்பது திருவள்ளுவர் கருத்து.

"ஈன்ற பொழுதிற்
பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன்எனக் கேட்டதாய்"

என்னுந் திருக்குறள் இதனை விளக்கும்.

பண்டைச் சங்ககாலப் புலவர்களைச் 'சங்கச் சான்றோர்' என்றே கூறுதல் உண்டு; நூற்றுக் கணக்கான சங்கச் சான்றோர் பண்டு நாடுமுழுதும் உலவி எங்கும் அறம் உரைத்து வந்தனர்.

'காங்கிரசு இயக்கம்' காந்தியடிகள் தொடர்பால் ஓரளவு சான்றோரியக்கமாய் மாறி நிகழ்ந்தமையால் நாடு விடுதலை கண்டது. இப்போது இயக்கம் நடத்துவோரும் சான்றோராதல் வேண்டும்.

'சான்றோ ரினத்திரு' என்னுங் குரல், இந்த இயக்கத்தின் வன்மையையும் இன்றியமையாமையையும் உணர்த்தும்.

'சான்றோர் இனம்' என்பது தான் இனம் என்னும் பெயர்க்கே ஏற்றது. அவர் அரசியலிற் சேர்ந்து பதவியையும் விரும்பார்; பொதுமக்களைப் போலவும் இரார்.

இந்த இருதிறத்தாரினுஞ் சிறந்து இருபக்கமும் அறங் கூறி நாட்டை நன்னிலைப் படுத்திவரும் இயக்கச் செயலினரே அவர்! நாட்டுப் 'பிரசாரகரே' அவர்! எளிய வாழ்க்கை கொண்டு அதற்குரிய தம் கடமைகளையும் தாமே செய்துகொள்வர்! பிறர்க்கெனவே வாழும் பெற்றியர்.

சான்றோர் வாழ நாடு வாழும்; வேறு வழி கோணல் வழி!

மொழிப் பகுதி:

திருக்குறள் நோக்கு!

ஒரு மனிதனே சிலகாலம் இல்லறத்தானாய் இருக்கலாம்; பின்பு துறவறத்தானாகவும் அமையலாம். அதனால் திருக்குறளில் இல்லற துறவற அதிகாரங்கள் எல்லாம் அவன் ஒருவனுக்கே உரியன வென்றாலும், இல்லற நிலையில் இல்லறப் பகுதியே சிறப்பின் உரியது! அப்படியே அரசனுக்கு, அமைச்சனுக்கு, தூதனுக்கு, ஒற்றனுக்கு, படைஞனுக்கு அவரவர்க்குரிய அதிகாரங்களல்லவா சிறப்பாக உரியவை! அப்படியே, கட்டிளைஞர்க்குரிய காமத்துப்பால், தொண்டு கிழவர்க்குச் சிறப்பாகப் பொருந்துமோ?

ஆகவே, குடிமக்களுக்கே சிறப்பின் உரியவை 'ஒழிபியல்' அதிகாரங்கள் என்று தெளிந்துகொள்ளப்படும். மற்றப் பொருட்பால் அதிகாரங்கள் அனைத்தும் அவர்கட்குப் பொதுவின் உரியவை. ஆட்சிக்குரிய அதிகாரங்கள் அரசியல் அதிகாரங்கள்; அதன் துணைக்குரிய அதிகாரங்கள், 'அங்கவியல்' அதிகாரங்கள்!

சான்றோர்க்குரிய அதிகாரங்கள் அறத்துப்பால் அதிகாரங்கள்! கலையுணர்வுமிக்க இளைஞர்க்குரிய அதிகாரங்கள் இன்பப்பால் அதிகாரங்கள்!

பொருட்பால், வாழ்க்கையின் தொடக்கம்; அரசன் அதனிற் சிறந்தோன்; தொடங்குவோருள், கலைஞராவோர், இடையே இன்பப்பாலினர்; எல்லார்க்கும் மேலாகச் சான்றோராய் உயர்வார்க்கு அறத்துப் பால் நிறைவு!

ஆகவே, அறத்துப் பாலுக்குரிய சான்றோர், தொடக்க மக்களாகிய பொருட்பாலவர்க்கும் இடைவழியினராகிய இன்பப் பாலவர்க்கும் துணைபுரிவர். பொருட்பாலவர் என்பது குடிமக்களும் அரசனும் அவன் துணைவரும்!

வாழ்க்கைத் தொடக்கத்தில் பொதுவாக மக்கள் தம் வாழ்க்கை நெறியில் தத்துவர்; அரசினர் அவர்க்குக் காவல் செய்வர்; கலைஞரை ஆதரித்துச் சான்றோரைத் துணை பற்றித் தம் காவல் கடமையைச் செய்வர். ஏனென்றால், குடிமக்களுக்குக் கலைஞர் உதவியும் சான்றோர் துணையும் வேண்டப்படும்.